தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 5

2008 ஏப்ரல் 17, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்”

சொற்களின் வழிமுறையறிந்த நல்லறிவாளர்கள் அவையின் நேரத்தையும், நிலைமையையும் உணர்ந்து உரையாற்ற வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா எண் *111*, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

111—

கசிவுநீர்க் குட்டைகள்

***30146**—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காளம்பாளையம் ஊராட்சி, சீளியூர் வழுக்குபாறை ஓடை, காளம்பாளையம் பகுதிகளில் கசிவுநீர்க் குட்டைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 17

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, காளம்பாளையம் ஊராட்சி, சீளியூர் வழுக்குபாறை ஓடை, காளம்பாளையம் பகுதிகளில் கசிவுநீர்க் குட்டை (க.ச. எண் 328) கட்டுவதற்கு ரூபாய் 24.00 இலட்சத்திற்கு பொதுப் பணித் துறையால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் நிதியுதவி கிடைக்கப்பெற்றதும் திட்டப் பணிகள் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, சீளியூர் கிராமத்தில் வழுக்குபாறை ஓடை அமைந்துள்ளது. அந்த ஓடையில் மழைக் காலத்தில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடுகின்றது. விவசாயிகள் நலன் கருதி கடந்த காலத்தில் க.ச. எண் 190, 195 மற்றும் க.ச. எண் 328 ஆகிய இரண்டு இடங்களில் கசிவுநீர்க் குட்டைகள் கட்டுவதற்காக விவசாயிகளே 10 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து, விலைகொடுத்து வாங்கி அரசாங்கத்திற்கு ஒப்படைத்துள்ளார்கள். அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட அந்த இடத்தில் குட்டை கட்டுவதற்காக தற்போது பொதுப் பணித் துறையால் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருவாய்த் துறை மற்றும் வனத் துறை சான்றிதழ் பெற்று அரசாங்கத்திற்கு அனுப்பி ஓராண்டு காலத்திற்கு மேலாகிறது. ஆகவே, மேற்படி இடத்திலே கசிவுநீர்க் குட்டை கட்டி அந்த மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்குவதற்கு உடனே நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் உள்ள காரைமேடு ஒன்றியம், காளம்பாளையம் ஊராட்சியில் க.ச. எண் 328–ல் கசிவுநீர்க் குட்டை கட்டுவதற்காக ஈரோடு, பொதுப் பணித் துறை செயற் பொறியாளர் அவர்களால் ரூபாய் 24 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. 1.5 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தை ஒட்டியுள்ள 5 ஏக்கர் தனியார் நிலம் விவசாயிகளால் வாங்கப்பட்டு மொத்தம் 6.5 ஏக்கரில் கசிவுநீர்க் குட்டை அமைக்கப்படவுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

இத்திட்டத்தில் செயற்கை முறையில் நிலத்தடி நீரை அதிகப்படுத்தும் வாய்ப்புகள் பற்றியும், நீர் செறிவு துளைகள் அமைத்தல் குறித்தான கருத்துகள் பெறும் பொருட்டும் மதிப்பீடுகள் சென்னை, தரமணி நீர்வள ஆதார அமைப்பு தலைமைப் பொறியாளர், பொதுப் பணித் துறை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவருடைய கருத்து கிடைத்தவுடன் அந்த இடத்தில் ரூபாய் 24 இலட்சம் மதிப்பீட்டில் கசிவுநீர்க் குட்டை கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி பெரும்பாலும் மேற்குத் தொடர்ச்சி மலையினுடைய அடிவாரத்தில் அமைந்திருக்கிறது. இந்தப் பகுதியிலே மழை பெய்கிற காலத்திலே மழை நீர் முழுவதும் வீணாகி, பவானி ஆற்றில் கலக்கின்ற அவல நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அந்த மலையின் அடிவாரத்தில் இருக்கின்ற ஓடைகளின் குறுக்கே பல்வேறு பகுதிகளிலே இதுபோன்ற தடுப்பணைகளைக் கட்டினால் அங்கிருக்கின்ற விவசாயிகளுடைய நீராதாரத்தைப் பெருக்குவதற்கு ஏதுவாக இருக்கும். அந்த வகையிலே பல்வேறு இடங்களிலே கசிவுநீர்க் குட்டைகள் கட்ட வேண்டும் என்று அரசாங்கத்திற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தவகையிலே காளம்பாளையம் கிராமத்தில் க.ச. எண் 115/2, 153/2, வெள்ளியங்காடு கிராமம் 103/1ஏ, 235/2 ஆகிய பகுதிகளிலே கசிவுநீர்க் குட்டை கட்டுவதற்கு அரசாங்கத்திற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலே விரைவிலே கசிவுநீர்க் குட்டை அமைத்து அங்கிருக்கின்ற விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துகின்றவகையிலே அரசு ஏற்பாடு செய்யுமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு நான் பதில் தந்திருக்கின்றேன். அவர் இன்னும் சில சர்வே எண்களையெல்லாம் சொல்லி அந்தப் பகுதிகளையெல்லாம் சொல்கிறார். அதுபற்றித் தனியாகக் கேள்வி எழுப்பினால் பதில் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கிற ஜமுனாமுத்தூர் மலையையொட்டி இருக்கிற கிராமங்களான அத்திமூர், திண்டிவனம், அமிர்தி, நாகநதி, சோமந்தபுத்தூர், பெரியகரம் போன்ற ஊர்களிலே மழைக் காலங்களிலே தண்ணீர் வீணாகிறது. அந்தத் தண்ணீரைத் தடுக்கின்ற விதத்திலே கசிவுநீர்க் குட்டை அமைத்தால் நீர்வள ஆதாரம் பெருகுவதோடு, அந்தப் பகுதி மக்களுக்கு வறட்சிக் காலத்திலே நீர் நிரம்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. எனவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அதைக் கவனத்தில் கொள்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய அந்த வினா குறித்து துறை ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெ. நெடுஞ்செழியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

112—

பணிமனை

***32499—திரு. ரெ. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டையில் போக்குவரத்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,